**செ. கு. எண்**: 24

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.1.2013

மதுரை மாநகர், கரிமேடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. சாரங்கபாணி அவர்கள் 3.1.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, திருவான்மியூர் தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையத்தைச் சேர்ந்த தீயணைப்போர் ஓட்டுநர் திரு. பிரகாஷ் அவர்கள் 6.1.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மாதவன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 7.1.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், வீராணம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மாரியப்பன் அவர்கள் 10.1.2013 அன்று ரயிலில் பயணம் செய்யும் போது தவறி கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் சாரங்கபாணி, தலைமைக் காவலர் மாதவன், தீயணைப்போர் ஓட்டுநர் பிரகாஷ் மற்றும் முதல்நிலைக் காவலர் மாரியப்பன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத்

துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் சாரங்கபாணி, தலைமைக் காவலர் மாதவன், மாரடைப்பால் காலமான தீயணைப்போர் ஓட்டுநர் பிரகாஷ் மற்றும் ரயிலில் பயணம் செய்யும் போது தவறி கீழே விழுந்து உயிரிழந்த மாரியப்பன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**